புதன் ,செப்டம்பர்,24, 2014

OM SAKTHI PUBLICATIONS
ஆசிரியர் : நா மகாலிங்கம்




Type in English (F12)



தக் கடிதங்கள் விவாதக் கடிதங்கள் - பிறச் செய்திகள் அட்டைப்பட விளக்கம். - புத்தக மதிப்பீடுகள் புத்தக மதிப்பீடு -

தலையங்கம் கட்டுரை விவாதம் ஆன்மிகம் ராசி பலன் நேர்காணல் சிறுகதை கவிதை

வாசகர்க் கடிதங்கள் விவாதக் கடிதம் பிறச் செய்திகள் புத்தக மதிப்பீடுகள் முந்தைய வெளியீடுகள்

# ஆடேடி பந்து

- அருள்பாரதி

ஆடேடி பந்து என்பது திருவருட் பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய கீர்த்தனைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பாடலாகும்.



மகளிர் பந்து விளையாடுதலைத் தலைப்பிட்டு அருளிய பாடல். வள்ளற் பெருமானார் பெற்ற பெரும்பேற்றினையும் வரத்தையும் எளிமையாக உணர்த்தும் இன்பத் தமிழ்ப் பாடல்; அருள் அனுபவத்தை அடையும் வழியினை அற்புதமாக ஓவியமாகத் தீட்டித் தரும் அழகு பாடல்; இரக்கமே என்னுயிர் என்று உலகம் அறிந்து கொள்ளும் வேட்கையால் - உணர்ச்சி மேலீட்டால் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் வாரீர் என்று அறைக்கூவல் விடுக்கும் அருட்பாடல் என்றெல்லாம் விளக்கி உரைக்கலாம்.

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர் அதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்நிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்தும்நாம் வம்மின் உலகியலீர்!
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்

என்று ஞான சரியை என்ற அருட்பாடலில் உலகியலார் அனைவரையும் அழைக்கின்றார் வள்ளற்பெருமான் எப்படி?

அருட்குருநாதன் அருளிய உபதேசத்தை நினைந்து அது தந்த விளைவை நினைந்து; அந்த இரண்டின் வழிபெற்ற அனுபவங்களானத் தன்னை உணர்ந்து பின்னர் தலைவனை உணர்ந்து, உணர்வு மேலீட்டால் பருஉடல் நெகிழ்ந்து அக உடலும் நெகிழ்ந்து மகிழ்ச்சியான ஆனந்தமே உளத்தும் புறத்தும் நிறைந்து நிறைந்து வற்றாப் பெருநீராக வரும் கண்ணீர் அதனால் அகஉடலையும் புற உடலையும் நனைந்து அருளார்ந்த அமுதமாகி இருக்கின்ற எப்போதும் குறையாத பெருநிதியே!

அருள்நடம் புரியும் அரசர் தலைவ! என்னுயிர் நாயகனே! என்று அகமும் புறமும் வனைந்து வனைந்து நாம் போற்றுவோம் அனைவரும் வாரீர்! உலகியலில் உள்ள மக்களே! மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் காண்டீர் இது உண்மை என்று அழைக்கின்றார்கள்.

இப்பாடல் உலகியலார் அனைவரையும் அழைத்த பாடல். ஆனால் ஆடேடி பந்து என்ற பாடல், ஆன்ம அனுபவ வெளிப்பாடான மனத்தைத் தோ-ழியாக அழைத்துக் கூறியதாக அமைந்துள்ள பாடலாகும். நினைந்து நினைந்து எனத் தொடங்கும் பாடல் அக வெளிப்பாட்டினை அனைவருக்கும் அறிவிக்கும் பாடல். ஆடேடி பந்து தன் மனத்தை அழைத்து அதற்கு உணர்த்துவது போல மாந்தர்க்கு மரணமிலாப் பெருவாழ்வைப் போதிக்கும் மாணிக்கப் பாடலாகும்.

மனத்தைத் தோழி என்று கூறி விட்டோம். பந்து என்றால் என்ன? ஆடல் என்றால் என்ன?

இங்கு ஒரு புராணக்கதை உரைக்க வேண்டியுள்ளது. கயிலை மலையில் அம்பிகை தோழியர்களுடன் பந்து விளையாடினார். சிவபெருமான் அப்போது அங்கு வருகை புரிய, அவரைக் கவனியாது அம்பிகை பந்து விளையாட்டிலேயே கவனமாக இருந்து விட்டார். சினம் கொண்ட சிவபெருமான் பந்தை எற்றினார். எற்றிய பந்து வந்து அணைந்த இடம்தான் பந்த(ணை)நல்லூர் ஆயிற்று.




ராசி பலன்கள்

இம்மாத ராசிபலன்

ஜோதிடத் திலகம் க. தில்லையம்பலம்

மேஷம் மேஷ ராசி நேயர்களுக்கு இம்மாதம் சூரியன் 5, 6-ஆமிடங்களில் சஞ்சரிப்பதால் புதிய முயற்சிகள் பலன் தரும். குறிப்பாக மாதத்தின் பிற்பாதி அவ்வாறான முயற��

மேலும்

ஆன்மிகங்கள்

கொல்லிமலை அறப்பளீசுவரர் ஆலயம்

என். ஆர். ஜெயசந்திரன்

நாமக்கல்லுக்குக் கிழக்கே உள்ள கொல்லிமலையில் நான்காயிரம் அடி உயரத்தில் குடிகொண்டுள்ள அறப்பளீசுவரர் ஆலயம் தொன்மைச் சிறப்பு வாய்ந்தது. செம்மேடு என�

மேலும்

Type in English (F12)



அம்பிகையைப் பசுவாகச் சபித்து விட்டார். அம்பிகை பசுவாகி, பதியாகிய சிவபெருமானைப் பூசித்த பேறு பெற்றார் என்பது பந்த(ணை) நல்லூர் என்ற ஊரின் தல புராணமாகும். இங்கு பந்து என்பது உலகியல் சார்ந்தது. அருளியல் சாராமல் புறநிலையில் ஈடுபட்டோரைக் குறிக்கின்றது.

விளையாட்டு என்பது கவனக் குறைவானத் குறைவினைத் தெரிவிக்கின்றது. அதுபோல பந்து உலகியலில் வாழும் ஆதாரத்திற்குரிய சுவாசமாகும். ஆடல் என்பது அதனை அடக்கி ஆளும் முறைமையைச் சுட்டுவதாகும்.

ஆடேடி பந்து ஆடேடி பந்து
ஆடேடி பந்து ஆடேடி பந்து
வாழி என் தோழி என் வார்த்தை கேள் என்றும்

மரணமில் லாவரம் நான் பெற்றுக் கொண்டேன்
சூழியற் செஞ்சுடர்த் தோற்றுறு கீழ்ப்பால்
தூய்த்திசை நோக்கினேன் சீர்த்திகழ் சித்தி
ஊழிதோ றூழிநின் றாடுவன் நீயும்
உன்னுதியேல் இங்கே மன்னரு ளாணை
ஆழிக் கரத்தணிந் தாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து

மனமாகிய தோழியே! நீ வாழ்க! என் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்பாயாக! என்றும் மரணமில்லாத வரத்தை நான் பெற்றுக் கொண்டுள்ளேன்! எனது அகத்தும் புறத்தும் செவ்வொளி சூழ்ந்து தோன்றுகிறது. எங்கு தோன்றியது தெரியுமா? கீழ்ப்பால். கீழ்ப்பால் என்றால் புருவ மத்தியாகும். அங்கேதான் செவ்வொளி தோன்றியுள்ளது. அது தூய்த் திசையாகும் மல மாசுகள் விலகிய இடம் அல்லவா அது? அசுத்தம் ஒழிந்த நிலை தூயதாகும். அதைத்தான் நோக்கினேன். எப்படி? உள் நோக்கினேன் என்று பொருள்.

பெருமை பொருந்திய புகழ் பரப்பும் சித்தியால் ஊழிதோறும் என்று நிலைபெற்று இருந்து அருள் புரிவேன். நீயும் நினைத்தால் இங்கே இறைவனருள் ஆணை வண்ணம் கரத்தில் ஆழி அணிந்து கொள்வாயாக. அதை அணிந்து கொண்டு ஆடுவாயாக. அருட்பெருஞ்சோதியைக் கண்டு ஆடுவாயாக என்பது இப்பாடலில் பெறப்படும் கருத்தாகும்.



ஆழிக் கரத்தணிதல் என்பது பிரணவ தரிசனமாகும். யோக நிலையில் அமரும் போது ஆட்காட்டி விரலைப் பெருவிரல் அடியில் சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் நீட்டினால் பூஜ்யம்! அல்லது சுழி தோன்றும். அதனைக் குண்டலம், குண்டலினி, ஆழி என்றும் அழைப்பர். அது ஓங்காரத்தைக் குறிக்கும். கரம், உள்ளங்கை, அங்கை என்பதெல்லாம் புருவ மத்தியையே குறிப்பிடுவதாகும்.

ஆக, நேரே நிமிர்ந்து அமர்ந்து யோக நிலையில் புருவ மத்தியில் கவனத்தைச் செலுத்தினால் சுவாசக் காற்று பந்து பந்தாக இணைந்து ஒன்றாக ஆடுவதை, ஓடுவதைச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும். அக முக நாட்டமே அருட்பெருஞ்சோதியைக் காண்பதற்கு ஆதாரமாகும்.

அகமுக நாட்டத்தினால் ஏற்படும் விளைவுகள் என்ன? அருட்பெருஞ்சோதியினைக் காண ஒட்டால் தடுக்கும். திரைகள் நீங்கும். கருப்பு, நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள், வெள்ளை பல வண்ணங்கள் என்ற நிறங்களுடைய மறைப்புகள் யாவும் அகன்று விடும்.

கடவுளர் மறைப்பைக் கடிந்தவர்க்கின்பம் என்பது அருட்பெருஞ்சோதி அகவல் ஒளி வரிகளாம். திரைகள் நீங்கப் பெற்றாலே ஜோதி தரிசனம் செய்யலாம். அதனைத்தான் வள்ளற்பெருமானார் அவர்கள் அகத்திற் கண்ட காட்சி அனுபவங்களைக் கருணையால் வடலூரில் சத்திய ஞானசபையாக வடிவமைத்து, ஜோதி தரிசனத்தைக் காட்டி வழிப்படுத்தியுள்ளார்.

சத்திய ஞானசபை என்னுள் கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன்
என்பது வள்ளற் பெருமானாரின் அவர்களின் தெள்ளத் தெளிவான வாய்மொழியாகும்.

Type in English (F12)

ஈரமும் அன்பும் கொண் டின்னருள் பெற்றேன்
என் மார்க்கம் இறவாத சன்மார்க்கம் தோழி
காரமும் மிகுபுளிச் சாரமும் துவர்ப்பும்
கைப்போடே உப்போடே கசப்போடே கூட்டி
ஊரமு துண்டுநீ ஒழியாதே அந்தோ
ஊழிதோறூழியும் உலவாமை நல்கும்
ஆரமு துண்டென்னோ டாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதி கண்டாடேடி பந்து

ஈவிரக்கமென்னும் பண்புடைமையால் இறைவனின் இனிய அருளைப் பெற்றிருக்கின்றேன். எனது மார்க்கம் இறவாத சன்மார்க்கமாகும். மனமாகிய தோழியே! காரமும் மிகுந்த புளிப்பும், துவர்ப்பும், கைப்பும், உப்பும், கசப்பும் கலந்து உலகார் உண்ணும் உணவினை உண்ணாமல் இருப்பாயாக!

அந்தோ, ஊழிதோறும் நிலைத்து நிற்கும் தன்மையை நல்கும் குற்றமில்லாத நல் அமுதத்தை உண்டு என்னுடன் பந்து ஆடுவாயாக. அருட்பெருஞ் ஜோதியைக் கண்டு பந்து ஆடுவாயாக! அதாவது சுவைகளுக்கு அடிமை ஆகாமல் உள்ளத்தூறும் ஆரா அமுதினைப் பருகுவாயாக. அதனால் அருட்பெருஞ்ஜோதியைக் காணலாம். நிலைத்து வாழலாம் என்றும் அருளி உள்ளார்.

துதிசெயும் முத்தரும் சித்தரும் காணச் சுத்தசன் மார்க்கத்தில் உத்தம ஞானப்
பதிசெயும் சித்திகள் பற்பல வாகப்
பாரிடை வானிடைப் பற்பல காலம்
விதிசெயப் பெற்றனன் இன்று தொட் டென்றும்
மெய்யருட் ஜோதியில் விளைவிப்பன் நீஅவ்
அதிசயம் பார்க்கலாம் ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதி கண்டாடேடி பந்து.

போற்றும் சீவன் முத்தர்களும் சித்தர்களும் காணுமாறு சுத்த சன்மார்க்கத்தில் உத்தம ஞானத் தலைவனாகிச் சித்திகள் பற்பல வகைகளை இப்பூமண்டலத்திலும் வானத்துலகிலும் பற்பல ஆண்டுகள் ஏற்றும் அருளியல் வல்லமை பெற்றுக் கொண்டேன்.

இன்று முதல் என்றும் உண்மை அருளொளியால் அச்சித்திகளைப் படைத்தளிப்பேன். நீ அந்த வியப்பிற்குரிய அற்புதங்களை எல்லாம் காணலாம். கண்டு பந்து ஆடலாம். அருட்பெருஞ் ஜோதியாகிய என்னைக் கண்டு பந்து ஆடலாம் என்று அருளியுள்ளார்.

Follow us on

தலையங்கம் கட்டுரை விவாதம் ஆன்மிகம் ராசி பலன் நேர்காணல் சிறுகதை கவிதை

Copyright © 2011 Om Sakthi Publications. All rights reserved.

Websolutions by AES Technologies (India) Pvt. Ltd.